**தேர்ச்சி** : **உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக (வரைவியல்) "கிராபிக் ஆக்கங்கள் படைப்பார்"**

**தேர்ச்சி மட்டம்** : **"சிறுவர் கதைப் புத்தகமொன்றிற்குப் பொருத்தமான முகப்பு அட்டையை நிர்மாணிப்பார்"**

**செயற்பாடு** : **'சிறுவர் கதைப் புத்தகமொன்றிற்குப் பொருத்தமான முகப்பு அட்டையை நிர்மாணிப்போம் '**

**ஒப்படை** : **பின்வரும் அறிவுறுத்தல்களை பின்பற்றுக.**

01. உங்கள் வீட்டிலுள்ள சிறுவர் கதைப்புத்தகங்கள் சிலவற்றையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

02. நீங்கள் பெற்றுக்கொண்ட சிறுவர் கதைப்புத்தக முகப்பு அட்டைகளில் காணப்படும் திட்டமைப்பு, உருவங்கள், வர்ண உபயோகம், எழுத்துருக்கள் தொடர்பாக நன்கு அவதானியுங்கள்.

03. நீங்கள் அவதானித்தவற்றைக் கொண்டு உங்களால் தெரிவு செய்யப்பட்ட சிறுவர் முகப்பட்டைக்கான தொனிப்பொருளுக்கு ஏற்றதாக பெயர், உருவங்கள், அளவு, வர்ண உபயோகம், முன் பின் அட்டைகளின் எல்லைக்கோடுகள், ஆசிரியர் பெயர், வேறு வடிவங்கள் என்பவற்றை திட்டமிட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

04 நீங்கள் திட்டமிட்டுக்கொண்டதை சுவட்டுப்பிரதித் தாள்களை உபயோகித்து வரைதற் தாளில் அதனை பிரதியிட்டுக் கொள்க

05 பின்னணியிலிருந்து எழுத்துருக்கள் தெளிவாக தெரியும் விதத்தில் எளிமையானதும், கவர்ச்சியானதுமான உருவங்கள், தளவடிவங்கள் பொருத்தமான வர்ணங்கள் என்பவற்றை உபயோகித்து புத்தகத்தின் முகப்பு அட்டையை வடிவமைக்குக.